<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – பள்ளிகள் – சேலம், திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல பள்ளிகளை நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது – பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.6,07,90,494/– மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2)துறை</u>

அரசாணை **(நிலை)** எண்:**86**

நாள்.02.08.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050.
விகாரி வருடம், ஆடி மாதம் 17–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.62, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.2)துறை, நாள் 11.10.2017.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.க4/ 9907/2019, நாள்.21.05.2019.

------

<u>ஆணை</u>:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சேலம் மாவட்டம், தாத்தியம்பட்டி அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியை, நடுநிலைப் பள்ளியாகவும், திருவள்ளூர் மாவட்டம், வளசரவாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகவும் மற்றும் தேர்வாய், அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகவும், நாகப்பட்டினம் மாவட்டம், மாதானம், அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகவும் நிலை உயர்த்தி நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதத்தில், நிலை உயர்த்தப்பட்ட மேற்காணும் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், ஆய்வுக் கூடம், சுற்றுச் சுவர் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட தாட்கோ செயற் பொறியாளரிடமிருந்து வரப்பெற்ற திட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில், அப்பணிகளை ரூ.672.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி, ஆணை வெளியிடுமாறு அரசிடம் கோரியுள்ளார்.

3. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ள மதிப்பீட்டறிக்கையில் உள்ள Civil Works–இன் மொத்த மதிப்பீட்டில் சில செலவினங்களை

(த.பி.பா.)

முழுவதுமாக குறைத்தும், சில செலவினங்களைக் கட்டுப்படுத்தியும், கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சேலம், திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இயங்கி வரும் அரசு ஆதிதிராவிடர் நல பள்ளிகளை நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டதனைத் தொடர்ந்து, அப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.6,07,90,494/– (ரூபாய் ஆறு கோடியே எழு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூற்றி தொண்ணூற்றி நான்கு மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி அளித்தும், நிதி ஒப்பளிப்பு வழங்கியும், அரசு ஆணையிடுகிறது:–

| வ.எண் | மாவட்டம் | நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளின் வகைப்பாடு | ஒதுக்கீடு செய்யப்படும் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | சேலம் | ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி, தாத்தியம்பட்டி. | 1,07,80,306 |
| 2. | திருவள்ளூர் | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, வளசரவாக்கம். | 76,35,006 |
| | | அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, தேர்வாய். | 3,70,05,816 |
| 3. | நாகப்பட்டினம் | ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, மாதானம். | 53,69,366 |
| | | **மொத்தம்** | **6,07,90,494** |

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4225–ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு–01 ஆதிதிராவிடர் நலன்–277 கல்வி–மாநிலச் செலவினங்கள்–JB–ஆதிதிராவிடர் நலப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் – **416** பெரும் பணிகள் – **01** பெரும் பணிகள்

(IFHRMS DPC: 4225 01 277 JB 41601)
(Old DPC: 4225 01 277 JB 1601)"

5. மேலே குறிப்பிட்டுள்ள பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(த.பி.பா.)

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கட்டுமானப் பணி தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோ நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:–

> "K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443–00–உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள்– BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள்–தாட்கோவின் வைப்புத் தொகைகள், 801-வரவுகள் 02 வட்டி அல்லாதவை"
>
> (த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)
>
> (த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo).
>
> (IFHRMS த.தொ.கு. 8443 00 800 BY 801 02) (Receipt)
>
> (IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 802 02) (Outgo).

7. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதி 2019–20 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும், 2019–20ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்ட மன்றப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2019–20–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(ஆதி(ம)பந/வ.செ.பொ–1)துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படியும், அதன்படி தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துருவை 2019–2020–ஆம் நிதியாண்டில் அரசுக்கு அனுப்பிவைக்குமாறும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியை விரைவாக செயல்படுத்துதல் மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(கு.பி.பா.)

9. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.33133/ஆதி(ம)பந/2019, நாள்.30.07.2019–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.877 (எண்ணூற்று எழுபத்து ஏழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)

பெறுநர்:
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், சேலம், திருவள்ளூர், நாகப்பட்டினம் மாவட்டம்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
சேலம், திருவள்ளூர், நாகப்பட்டினம் மாவட்டம்
மாவட்ட கருவூல அலுவலர், சேலம், திருவள்ளூர், நாகப்பட்டினம் மாவட்டம்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை –600 009.
நிதித்(ஆதி(ம)பந/வ.செ.பொ–1 / வ.செ.பொ–II) துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின்
தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு–1/ஆதிந–5/ ஆதிந–7) துறை,
சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
2.8.19